**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 390/2016</u>**

நாள் 19.01.2026

DW1 – கே. முத்துசாமி

த/பெ – குங்கா கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. இறந்து போன 1–ம் வாதி கே.சி.முருகேசன் என்பவரின் தகப்பனார் பெயர் சின்னப்பன் (எ) சின்னச்சாமி பண்டாரம் என்றால் சரிதான். அந்த சின்னப்பன் (எ) சின்னச்சாமி பண்டாரத்தின் அப்பா பெயர் நஞ்சு பண்டாரம் என்றால் சரிதான். அதனால், அந்த நஞ்சு பண்டாரத்தின் பேரன் தான் 1–ம் வாதி என்றால் சரிதான். தாவா சொத்தை ஆதியில் 25.10.1918–ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.4296/1918 கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்ட தாவா சொத்தை காளி பண்டாரம் என்பவருக்கு கடந்த 21.01.1919–ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.296/1919 வா.சா.ஆ.2–ன் படி கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான், ஏற்கனவே கோவில் பெயருக்கும் அவர்கள் பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார்கள். நான் 19.07.1954–ம் தேதியில் பிறந்துள்ள நிலையில் 1918, 1919–ம் ஆண்டில் தாவா சொத்தை பொறுத்து நடந்த விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முன் வழக்கான அ.வ.எண்.19/2004 வழக்கில் நான் சாட்சி கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தரப்பில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், 1–ம் பிரதிவாதி தான்

எதிர்வழக்குரையில் கையொப்பம் செய்துள்ளார், நாங்கள் அதை ஏற்றுக்கொண்டுள்ளோம். அந்த 1–ம் பிரதிவாதி தான் அ.வ.எண்.19/2004 வழக்கையும், இந்த வழக்கையும் முன்னின்று நடத்தி வந்தார் என்றால் சரிதான். அதனால், இந்த வழக்குகள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவர்கள் சொல்லி எனக்கு தெரியும். 1–ம் பிரதிவாதி கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இறந்து போய்விட்டார். 1–ம் பிரதிவாதியின் இறப்பை நாங்கள் உடனடியாக இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு பசலி எண்.1396–ன் படி பட்டா எண்.532 என்று சின்ன பழனிக்கவுண்டர் பண்டாரம் மக்கள் மாரப்பண்டாரம், நஞ்சப்ப பண்டாரம், நஞ்ச பண்டாரம் மக்கள் கருணையம்மாள், சின்ன பண்டாரம், மயங்காத்தாள், ராமாத்தாள், சண்முகம், சுப்பிரமணியம் ஆகியோர் பெயரில் தான் கூட்டுப்பட்டாவாக இருந்து வந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 1–ம் வாதியின் தாத்தாவான நஞ்ச பண்டாரம் 05.03.1970–ம் தேதி நாராயண வாத்தியார் மகள் மாராத்தாள் என்பவருக்கு ஒரு அடமான பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.19/2004 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்திற்கு வில்லங்க சான்று எடுத்து பார்த்தோமா? என்றால் 1–ம் பிரதிவாதி தான் வில்லங்கம் பாத்திருப்பார், அது எனக்கு தெரியாது. அந்த வில்லங்க சான்றை அந்த முன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு பசலி எண்.1391 முதல் 1405 பசலி ஆண்டு வரையிலான அடங்கல் கணக்கு பதிவு 1–ம் வாதியின் மூதாதையர்கள் பெயரில் தான் இருந்து வந்தது என்றால் அது எனக்கு தெரியாது, 1960–ம் ஆண்டிற்கு முன்பாக சொத்தை

ஓட்டியிருக்கலாம், அதன்பேரில் அவர்கள் பெயர் வந்திருக்கலாம். அ.வ.எண்.19/2004 வழக்கில் இந்த வழக்கின் 1–ம் வாதியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர் தேவையில்லாத நபர் என்பதால் சேர்க்கவில்லை. 1–ம் வாதி தேவையில்லாத நபர் என்று இந்த வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோபிசெட்டிபாயம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்கள் விசாரணை செய்து தாவா சொத்தை வாதியின் முன்னோர்கள் தான் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டு அவர்களுடைய அனுபவத்தை ஊர்ஜிதம் செய்து 07.11.1966–ம் தேதியில் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான், அது பற்றிய விபரம் எங்களுக்கு தெரிய வரவே இல்லை. அந்த உத்தரவு தான் வா.சா.ஆ.3 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 உத்தரவு தேதிக்கு முன்பு வரையில் தாவா சொத்து இனாம் பூமியாக தான் இருந்து வந்தது என்றும், அந்த சொத்து வாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதை ஊர்ஜிதபடுத்தி தான் கோபிசெட்டிபாளையம் தனி வட்டாச்சியர் அவர்கள் வாதியின் முன்னோர்கள் பெயரில் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 உத்தரவிற்கு எதிராக எந்தவொரு மேல்முறையீடும் எங்கள் தரப்பில் போகவில்லை என்றால், அந்த உத்தரவு பற்றிய விபரமே எங்களுக்கு தெரியாது. 1919–ம் ஆண்டில் நான் சொல்லும் விநாயகர், மாரியம்மன் கோவில் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ–3–ன் படி வாதியின் முன்னோர்கள் தான் தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த வா.சா.ஆ.3 உத்தரவானது இறுதி ஆனது என்றால் சரியல்ல. வாதியின்

மூதாதையர்கள் தான் தாவா சொத்தை 1919–ம் ஆண்டிலிருந்து கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் வாதியின் முன்னோர்களுக்கு இருந்து வந்த பாத்திய உரிமை குறித்த ஆவணங்களை மறைத்து விட்டு வாதிக்கு தெரியாமல் தான் அ.வ.எண்.19/2004 வழக்கில் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால், அ.வ.எண்.19/2004 வழக்கில் பிறந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை தாவா சொத்தில் வாதிக்கு உள்ள பாத்திய உரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த முன் வழக்கில் தாவா சொத்து சம்பந்தமான வருவாய் ஆவணங்கள் எதுவும் முன்னிலை படுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்குள்ள பாத்திய உரிமையை மறைப்பதற்காக தான் அந்த வழக்கில் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யாமலும், வாதியை கட்சி சேர்க்காமலும் மோசடியாக தீர்ப்பு பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் நஞ்ச பண்டாரம் மகன் காளி பண்டாரம் என்பவருக்கு கோவில் பூசாரியாக இருக்க விருப்பமில்லை என்ற வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் சொல்லும் கோவிலுக்கு எந்த காலத்திலும் எந்தவொரு பாத்திய உரிமையும், அனுபவமும் இருந்து வந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.19/2004 வழக்கில் பிராதுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.01.19 17:56:17 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**